# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை (திருத்தச்) சட்டம்

---

*[1982, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 65* — *தபாற் செலவு : சதம் 50*

1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை (திருத்தச்) சட்டம்

[1982, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 14/80
1464

1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப் பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபைச் சட்டத்தின் விரிவுப் பெயரானது, "அமைச்சரின் கட்டளையினால் வெளிப்படுத்தப்படக்கூடிய அத்தகைய இடப்பரப்புகளை, கட்டடங்கள் அமைக்கும் நோக்கங்களுக்கு உகந்தனவாகச் செய்யக்கூடிய வகையில் மீட்டற்கும், அபிவிருத்தி செய்தற்கும் மற்றும் அதனோடு தொடர்பானவையும் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்குமாகக் கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்தி செய்தற் சபை என அறியப்பட வேண்டிய சபையொன்றைத் தாபிப்பதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சர் கட்டளையினால் வெளிப்படுத்தப்படக்கூடிய அத்தகைய இடப்பரப்புகளை மீட்டற்கும், அபிவிருத்திசெய்தற்கும் என கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை என அறியப்படவேண்டிய சபையொன்றைத் தாபிப்பதற்கும்; அத்தகைய கூட்டுத்தாபனம் பொறியியற்றுறையில் திருமான சேவையையும் ஆலோசனைத் தொழிற்சாட்டுகைளையும் பொறுப்பேற்பதற்கும் அத்துடன், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

2—ஏ 66499—7,175 (11/82)

"கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்பு) மீட்டல், அபி விருத்தி செய் தற் சபைச் சட்டம்", "கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்பு) மீட்டல், அபி விருத்தி செய் தற் சபை", "சபை" என்பன முறையே "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தற் கூட்டுத்தாபனச்சட்டம்" என்றும் "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தற் கூட்டுத்தாபனம்" என்றும் "கூட்டுத்தாபனம்" என்றும் அறியப்பட வேண்டும்.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும்—

(அ) "கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபைச் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத்தாபனச் சட்டம்" என்னும் சொற்களும்; அத்துடன்

(ஆ) "கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை" என்னும் சொற்களுக்கும் கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபையைக் குறிக்கும் "சபை" என்னும் சொல்லுக்கும் பதிலாக முறையே "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத்தாபனம்", "கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களும்

இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், சாதனத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபைச் சட்டம்", "கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபை" என்பவற்றிற்கான குறிப்பீடுகள் ஒவ்வொன்றும் முறையே "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத்தாபனச் சட்டம்", "இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத்தாபனம்" என்பவற்றுக்கான ஒரு குறிப்பீடாக வாசிக்கப்படுதலும் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(1) காணி இடப்பரப்பு எதுவும், தாழ்ந்த சேற்று, தரிசு அல்லது அடர்சேர் இடப்பரப்பு ஒன்றாகவுள்ளது என அமைச்சர் திருப்தியடைகின்றவிடத்தும், அத்தகைய காணி ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளவிடத்தும், உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருடனும் அத்தகைய காணி எந்த உள்ளூரதிகாரசபையினுள் அல்லது அதிகாரசபைகளினுள் அமைந்துள்ளதோ அவ்வுள்ளூரதிகாரசபையுடனும் அல்லது அதிகாரசபைகளுடனும் ஆன கலந்தாலோசனையுடன், அல்லது அத்தகைய காணி உள்ளூரதிகாரசபையொன்று உருவாக்கப்படாததும், ஆனால் ஏதேனும்

சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வேறு ஏதேனும் அதிகார சபை உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டுள்ளதுமான இடப்பரப்பொன்றினுள்ளிருப்பின், அப்போது அத்தகைய அதிகாரசபைக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய இடப்பரப்பை இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, மீட்டல், அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக அவர் வெளிப்படுத்துதல் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அந்த இடப்பரப்பினைத் திரும்ப எடுத்தலும், அபிவிருத்தி செய்தலும், கட்டடங்கள் அமைக்கும் நோக்கங்களுக்கென அதனை உகந்ததாக்குதலும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அந்த இடப்பரப்பினைத் திரும்ப எடுத்தலும் அபிவிருத்தி செய்தலும்" என்ற சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, அதனது (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் காணி அல்லது காணிகள் அமைந்துள்ள அல்லது அமைந்திருக்கின்றனவற்றின் நியாயாதிக்கத்தினுளுள்ள உள்ளூரதிகார சபைக்கு உரித்துடையது அல்லது உரித்துடையனவாயும் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட மீட்டல், அபிவிருத்தி இடப்பரப்பொன்றை உள்ளடக்குகின்ற அல்லது உள்ளடக்குகின்றனவாயுமுள்ள அத்தகைய ஏதேனும் காணி அல்லது காணிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் காணி அல்லது காணிகள் எந்த உள்ளூரதிகாரசபையின் அல்லது உள்ளூரதிகார சபைகளின் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அல்லது அமைந்துள்ளனவோ அந்த உள்ளூரதிகாரசபைக்கு அல்லது உள்ளூரதிகாரசபைகளுக்கு அல்லது அந்த வேறு ஏதேனும் அதிகாரசபைக்கு உரித்துடையதும் அல்லது உரித்துடையனவும், 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட மீட்டல், அபிவிருத்தி இடப்பரப்பொன்றை உள்ளடக்குகின்றதும் அல்லது உள்ளடக்குகின்றனவுமான அத்தகைய ஏதேனும் காணி அல்லது காணிகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது அதனது (1) ஆம் உட்பிரிவில் "அக்காணி எப்பிரதேசத்தின்கண் அமைந்துள்ளதோ அதற்கான உள்ளூரதிகாரசபைக்கு உரித்தாக்கப்படாத ஏதேனும் காணியாக இருக்குமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் காணி எந்த உள்ளூரதிகாரசபையின் அல்லது உள்ளூரதிகார சபைகளின் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த உள்ளூரதிகாரசபைக்கு அல்லது உள்ளூரதிகாரசபைகளுக்கு அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படாததாகவிருக்கின்ற அத்தகைய ஏதேனும் காணியை உள்ளடக்குகின்றவிடத்து," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதனது (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட வேறு ஆறு உறுப்பினர்கள், அவர்களுள் ஒருவரேனும் தகைமைபெற்ற சிவில் பொறியியலாளராயிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாரும் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வர்த்தக அல்லது கமத்தொழில் நோக்கத்துக்கு பொருத்தமானதாகச் செய்தலும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வர்த்தக அல்லது கமத்தொழில் நோக்கங்களுக்குப் பொருத்தமானதாகச் செய்தலும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஆகியவற்றை வைத்திருத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆகியவற்றை வைத்திருத்தல்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்:

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை சேர்த்துக்கொள்வதன்மூலம் :—

"(இ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையினால் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்புகள் தவிர்ந்த இடப்பரப்புகளில், பொறியியற்றுறையில் நிருமாண வேலையையும் ஆலோசனைத் தொழிற்சாட்டுகைகளைப் பொறுப்பேற்றல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுதல் மூலம்;

(2) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம்;

"(ஆஅ) அத்தகைய இடப்பரப்புகளின் உள்ளமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட வேலைத்திட்டம் எதனையும் வகுத்தமைத்தல் அல்லது நிறைவேற்றுதல்;

(ஆஆ) அத்தகைய இடப்பரப்புகளில் கப்பற்றுறைகளையும், நங்கூரம் பாய்ச்சுமிடங்களையும் நிர்மாணித்தலும், நீர்ப்பாசனம், கடல்மீட்டல் அத்துடன் கரையோர அபிவிருத்தி ஆகிய துறைகளில் வேலைகளைப் பொறுப்பேற்றலும் ;" ;

(ஆ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் ;

" (ஈஅ) கட்டிட வேலைக்குப் பொறியியல் வேலைக்கு அல்லது நிர்மாண வேலைகளுக்குத் தேவைப்படும் ஏதேனும் பொருட்கூறை உற்பத்திசெய்தல் உள்ளிட்ட அத்தகைய கட்டிட வேலையைப் பொறியியல் வேலையை, அல்லது நிர்மாண வேலையை நிறைவேற்றிவைத்தல் ;

(ஈஆ) பொறியியற் கருமங்களிலும், தொழிநுட்பக் கருமங்களிலும் மதியுரை சேவைகளுக்கும், ஆலோசனைச் சேவைகளுக்கும் ஏற்பாடுசெய்தல் ;

(ஈஇ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான காணி அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கென எவரேனும் ஆளுடன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல் ;" ; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

" (2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், எது எப்படியிருப்பினும் (ஆஅ), (ஆஆ), (ஈஅ) என்னும் பந்திகளின் கீழான தத்துவங்களைக் கூட்டுத்தாபனமானது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி இடப்பரப்பு ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் இடப்பரப்புக்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து முன்னரே அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது பிரயோகித்தலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

**10.** ஒன்பதாம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

**" அமைச்சரவையினால் கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைக் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிவைத்தல்.**

9அ. இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவில், எது எப்படியிருப்பினும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான, 8 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறாக இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துதல் தொடர்பிலான ஏதேனும் செயற்பாட்டில் கூட்டுத்தாபனம் ஈடுபடலாம் அல்லது அதனை நிறைவேற்றிவைக்கலாம்.".

இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவு கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுடையதாதல்.

11. இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும், அச்சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனம் ஈடுபட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் செயற்பாடு வலிதுற ஈடுபடுத்தப்பட்டது அல்லது நிறைவேற்றப்பட்டது எனக் கருதப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 26 அ, 26ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

12. இருபத்தாறும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ, 26ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

26அ. கூட்டுத்தாபனத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, கூட்டுத்தாபனம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

26ஆ. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட கூட்டுத்தாபனம் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.".

முதலாம் அட்டவணையை நீக்கிவிடல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் நீக்கப்படுகின்றது.

நிலைமாறுகால ஏற்பாடு.

14. (1) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் உள்ளவையான அல்லது பயனுள்ளவையான கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபையின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், மற்றச் சாதனங்களும், கொழும்பு மாவட்ட, (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்தி செய்தற் சபைக்குப் பதிலாக இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தற் கூட்டுத்தாபனம்

அதற்கு ஒரு திறத்தவராக இருந்தாற்போன்று முழுமையாகவும் பயனுறும் வகையிலும், இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத் தாபனத்திற்கு எதிராக அல்லது அதற்குச் சார்பாகப் பயனுறுதலும் வேண்டும்.

(2) கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்திசெய்தற் சபையினால் அல்லது சபைக்கெதிராகத் தொடரப்பட்டுள்ளவையும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் முடிவுறுதுள்ளவையுமான எல்லாத் தொடர்ச்சிகளும், வழக்குகளும், மேன்முறையீடுகளும் வேறு சட்ட நடவடிக்கைகளும் தணிந்தற்றுப்போதலோ இடைநிறுத்தப் படுதலோ ஆகாது என்பதுடன், இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தற் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து செயற்படுத்தப்படலாம் அல்லது வலுவுறுத்தப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று, கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல், அபிவிருத்தி செய்தற் சபைக்குள்ளவையும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உரிமைகளும், பொறுப்புகளும், கடப்பாடுகளும் தவிர்ந்தவையுமான, எல்லா உரிமைகளும், பொறுப்புகளும், கடப்பாடுகளும், இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திசெய்தற் கூட்டுத்தாபனத்தின் உரிமைகளாகவும் பொறுப்புகளாகவும், கடப்பாடுகளாகவும் கருதப்படல் வேண்டும்.